குரலற்ற சமூகத்துக்கும் ஆதரவுக்கரமாக செயல்பட்டவர் கருணாநிதி

கனிமொழி எம்.பி.

வேலூர், ஆக. 26: பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமின்றி தொழுநோயாளிகள், மாற்றுத் திறனாளிகள் திருநங்கைகள் போன்ற குரலற்ற மக்கள் சமூகத்துக்கும் ஆதரவுக்கரமாக செயல்பட்டவர் கருணாநிதி என்று நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி புகழாரம் சூட்டினார்.

தமிழியக்கம், விஐடி பல்கலைக் கழகம், பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் மன்றம் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா வேலூர் விஐடி பல்கலைக்கழக அரங்கத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவில் நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி நெகிழ்வுரையில் பேசியது:

இந்தியாவில் 4 இடங்களில் விஐடி பல்கலைக்கழக வளாகங்களை உருவாக்கியுள்ள கோ.விசுவநாதன், அடுத்த வளாகத்தை தூத்துக்குடியில் தொடங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கருணாநிதி குறித்தும் அவரது அரசியல் பயணம், மக்கள் தொண்டு, எழுத்துத் திறன் குறித்துப் பேச பலரும் உண்டு. அவரது மகளாக எனக்கு அத்தனையுமாக இருந்தவர். அவருடன் இருக்கும் நேரங்கள் எப்போதும் மகிழ்ச்சி தரக்கூடியவை.

கருணாநிதி பார்க்காத வெற்றி, தோல்வி, அவமானம் கிடையாது. எதற்கும் அவர் தளர்ந்துவிடவில்லை. அவர் வாழ்நாள் மட்டுமின்றி அவர் மறைந்த பிறகும் போராடித்தான் வெற்றி கண்டார். அவரை இளைஞர்கள் முன்மாதிரியாக கொள்ள வேண்டும்.

கருணாநிதி தனது ஆட்சிக் காலத்தில் பொதுவிநியோகத் திட்டம், குடிசை மாற்று வாரியம், பெண்களுக்கு காவலர் பணி, பெண் கல்வியை ஊக்குவிக்க திருமண நிதியுதவி என எத்தனையோ முன்னோடி திட்டங்களை கொண்டு வந்தார். விவசாயிகளுக்கு இலவச மின்சார திட்டம் தந்து விவசாயத்தை பாதுகாத்தவர்.

பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமின்றி அவர் வாக்கு வங்கியாக இல்லாத தொழு நோயாளிகள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் போன்ற குரலற்றவர்களுக்காகவும் ஆதரவுக்கரமாக செயல்பட்டவர். உலகில் யாரும் குறைகள் இல்லாத முழுமைபெற்றவர்கள் இல்லை. ஏதாவது ஒரு இடத்தில் தவறு செய்யக் கூடியவர்கள்தான். அப்படி தவறு செய்த நண்பர்களை அவர்கள் முன்பு செய்த நன்மைகளை எண்ணி மன்னித்து ஏற்றுக் கொண்ட ஒப்பற்ற தலைவராகவும் விளங்கியவர் கருணாநிதி.

உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற கொள்கை பிடிப்புடன் திகழ்ந்தவர். அவசர நிலை காலகட்டத்தில்கூட ஜனநாயகத்துக்காக குரல் கொடுத்து தனது ஆட்சியை இழந்தவர். அவர் எப்போதும் தனது கொள்கைகளை எதற்காகவும், யாருக்காகவும் விட்டுக் கொடுத்ததில்லை என்றார்.

கவிஞர் வைரமுத்து விழா பேருரையில் பேசியது:

வயது தாண்டி சாதனை படைத்தவர் கருணாநிதி. அவரை இளைஞர்கள் பல வழிகளில் பின்பற்றலாம். சாதிப்பதற்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை என நிரூபித்தவர் கருணாநிதி. அவர் அத்தனை சமூகத்தையும் மேம்படுத்தியவர். சிறுவயதிலிருந்து மரணத்தின் முன் நிமிடம் வரை பகுத்தறிவாளனாக வாழ்ந்து மறைந்தார். மாணவர்கள் அண்ணா, கருணாநிதியின் எழுத்துக்கள், சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகியவற்றை வாய்விட்டு வாசிக்க வேண்டும். கருணாநிதியின் எழுத்துக்களை வாய்விட்டு வாசித்துத்தான் நான் எனது தமிழை வளர்த்துக் கொண்டேன்.

புதிதாக சிலர் அரசியல் கட்சி தொடங்குகின்றனர். ஒரு கட்சிக்கு மூலதனம் என்பது தொண்டர்களோ, கட்டமைப்போ இல்லை. பகைதான் அதற்கு மூலதனம். எதிரி இல்லை என்றால் வெற்றி கிடைக்காது. ஆங்கிலேயர் என்ற நல்ல எதிரி கிடைத்ததால்தான் மகாத்மா காந்தி வென்றார். ஆரியம் எனும் எதிரியால்தான் திமுக வளர்ந்தது. அதுபோல் எம்ஜிஆருக்கு எதிரியாக கருணாநிதி இருந்தார். அதனாலேயே எம்ஜிஆரால் வெற்றி பெற முடிந்தது. எதிரியை வைத்துத்தான் அரசியல் கட்சியின் வெற்றியும், தோல்வியும் அமையும். கருணாநிதி எதிரிகளை உண்டாக்கிக் கொண்டே இருந்தார். தடைகற்களை படி கற்களாக மாற்றினார்.

செங்கோல் இல்லை என்றால் எழுதுகோல் உள்ளது என சாதித்து காட்டினார். உழைப்பு, எதிரிகளை எப்படி கையாள்வது என்பதையும், துணிச்சலுடன் எப்படி வாழ வேண்டும் என்பதை கருணாநிதியிடம் கற்றுக்கொள்ளலாம் என்றார்.

தமிழியக்கத்தின் நிறுவனர் - தலைவரும், விஐடி வேந்தருமான கோ.விசுவநாதன் தலைமை வகித்துப் பேசியது:

ஒரு சாதாரண மனிதரும் வளர்ந்து தலைவராகவும், சாதனைகளை செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாக திகழ்ந்தவர் கருணாநிதி.

பள்ளிப் படிப்புடன் நின்றுவிட்டாலும் தனது முயற்சியால் தொல்காப்பியத்துக்கு உரை எழுதும் அளவுக்கு தன்னை உயர்த்திக் கொண்டவர். அவரிடம் இருந்து பலவற்றை தமிழக மக்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

சுதந்திர தினம், குடியரசு தினத்தில் ஆளுநர்கள்தான் தேசியக் கொடி ஏற்றும் நிலையை மாற்றி, மாநில முதல்வர்கள் தேசியக் கொடியை ஏற்றும் வாய்ப்பை பெற்றுத் தந்தவர். பெண்களுக்கு காவல் துறையில் வாய்ப்பு, பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு அதிகரிப்பு என தமிழகத்தில் அவர் பல சாதனைகளை புரிந்துள்ளார். அவர் உருவாக்கிய திருவள்ளுவர் சிலை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிற்கும்.

தனது 14 வயதிலேயே அரசியலுக்கு வந்த கருணாநிதி, மிகச்சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராக, நாடகம், சினிமா வசன கர்த்தாவாக திகழ்ந்தார். அவர் எழுதிய 108 புத்தகங்களை இளைஞர்கள் படிக்க வேண்டும்.

மத்திய அரசுடன் நல்ல உறவு இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தாலும், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதில் உறுதியாக இருந்தவர் கருணாநிதி. அவர் நாட்டுக்காகவே வாழ்ந்தவர். அவரது குடும்பமும் நாட்டுக்காக வாழ்ந்து கொண்டுள்ளனர் என்றார்.

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி, துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வாழ்த்திப் பேசினர்.

விழாவில், வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார் (அணைக்கட்டு), ப.கார்த்திகேயன் (வேலூர்), ஜெ.எல்.ஈஸ்வரப்பன் (ஆற்காடு), அமலு விஜயன் (குடியாத்தம்), வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், விஐடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், கோ.வி.செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழாவில் பேசிய நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி. உடன், கவிஞர் வைரமுத்து, விஐடி வேந்தர் கோ.விசுவநாதன், அமைச்சர்கள் துரைமுருகன், ஆர்.காந்தி உள்ளிட்டோர்.

முதல்வர் வாழ்த்து

வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியிருந்தார். இந்த வாழ்த்துக் கடிதம் விழாவில் வாசிக்கப்பட்டது. முன்னதாக, அமைச்சர்கள் துரைமுருகன், ஆர்.காந்தி, விஐடி வேந்தர் கோ.விசுவநாதன், மக்களவை உறுப்பினர்கள் கனிமொழி, டி.எம்.கதிர்ஆனந்த், சட்டப் பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கருணாநிதியின் உருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். மேலும், விழாவில் கருணாநிதியுடன் இருந்த அலுவலர்களுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

டைகர் கேப்பிட்டல் பிரைவேட் லிட்.

TYGER CAPITAL

பதிவு அலுவலகம்: அதானி ஹவுஸ், 56, ஸ்ரீமாலி சொசைட்டி, நவ்ரங்புரா, அகமதாபாத் 380009, குஜராத், இந்தியா.
பெருநிறுவன அலுவலகம்: 1004/5, 10ஆவது தளம், C-பிரிவு, 1 BKC, C-66, G-பிளாக், பாந்த்ரா-குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை – 400 051, மகாராஷ்டிரம், இந்தியா.
CIN : U65990GJ2016PTC093692, **இணையத்தளம்:** www.adanicapital.in

சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்களுக்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **டைகர் கேப்பிட்டல் பிரைவேட் லிட்.** (முன்பு M/s **அதானி கேபிடல் பிரைவேட் லிட்.** என அறியப்பட்டது, நிறுவன விவகார அமைச்சகத்தின் நிறுவனங்களின் பதிவாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட 6" ஜூன் 2024 தேதியிட்ட ஒருங்கிணைப்புச் சான்றிதழ் மூலம் இனி இங்கே 'TCPL' எனப்படும்.)-இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, விதி 8(1)-க்கு இணங்கவும் அதன் பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்திடும் கோரிக்கை அறிவிப்பினை / அறிவிப்புகளை ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் தொடர்புடைய கடன்தாரருக்கு / கடன்தாரர்களுக்கு அனுப்பி ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையினை அவ்வறிவிப்பு நாளிலிருந்து / அவ்வறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர்(கள்) அத்தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ள நாட்களில் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.
எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் / அச்சொத்துக்களின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **டைகர் கேப்பிட்டல் பிரைவேட் லிட்.** (அதானி கேப்பிட்டல் பிரைவேட் லிட்.)-க்குச் செலுத்த வேண்டிய தொகையைக் கடன் ஒப்பந்தப்படியான அதன் வட்டியுடன் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். மேற்படி சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8) மற்றும் (9)-இன்படி கடன்தாரர்கள் கடனீட்டுச் சொத்துக்களை மீட்க இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள்.

வ. எண்	கடன் கணக்கு எண் / பழைய கடன் கணக்கு எண்	கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	அடையாள / நேரடி சுவாதீன நாள்
1.	106MSM001021352	ராஜி G / பூங்கொடி R	21.10.2023 / 21.10.2023 நாள்படி ரூ.2023283.05/-	21.08.2024 - அடையாள சுவாதீனம்

அடகு வைக்கப்பட்டுள்ள சொத்து முகவரி: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். நத்தம் சர்வே எண் 88/1A (வடக்கு பாகம்), பரப்பளவு 960 சதுர அடி. அமைவிடம் - எண் 44, 9/42, பஜனை கோவில் தெரு, பரணிபுத்தூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: திரு. பரசுராம் அவர்களின் நிலம், தெற்கு: Ms. அரிபூரணம்மாள் அவர்களின் எஞ்சிய பாகம், கிழக்கு: பொது வழிப்பாதை, மேற்கு: திரு. மாரி நாயக்கர் அவர்களின் சொத்து.
நாள்: 27.08.2024 டைகர் கேப்பிட்டல் பிரைவேட் லிட். சார்பில்
இடம்: தமிழ்நாடு ஓம்/-
*மொழிபெயர்ப்பினால் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால் ஆங்கிலப் பதிப்பே முதன்மையானது. அதிகாரப்பூர்வ அலுவலர்

ஆவணி மாத கிருத்திகை: திருத்தணியில் திரளான பக்தர்கள் தரிசனம்

திருத்தணி, ஆக. 26: திருத்தணி முருகன் கோயிலில் ஆவணி மாத கிருத்திகையையொட்டி திரளான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

திருத்தணி முருகன் கோயிலில் மாதந்தோறும் வரும் கிருத்திகை விழா கொண்டாடப் படுகிறது. கடந்த மாதம், 29-ஆம் தேதி நடந்த ஆடிக்கிருத்திகை விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் காவடிகளுடன் முருகப்பெருமானை தரிசித்தனர்.

ஆடிக்கிருத்திகை அடுத்து வரும் ஆவணி மாத கிருத்திகை என்பதால், பெரும்பாலான பக்தர்கள் காவடிகளுடன் வந்து மூலவரை வழிபட்டனர். தொடர்ந்து மூன்று நாள்கள் விடுமுறை என்பதால் ஞாயிற்றுக்கிழமை பொதுவழியில் நீண்ட வரிசையில் நான்கு மணி நேரம் காத்திருந்து மூலவரை தரிசித்தனர். பெரும்பாலான பக்தர்கள் காவடிகளுடன் வந்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர். முன்னதாக கிருத்திகையை ஓட்டி அதிகாலை, 4.30 மணிக்கு மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், தங்கவேல், தங்ககீரிடம் மற்றும் வைர ஆபரணங்கள் அணிவித்து சிறப்பு தீபாராதனை நடந்தது. காலை, 9.30 மணிக்கு காவடி மண்டபத்தில் உற்சவர் முருகப்பெருமானுக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் மற்றும் அலங்காரம் தீபாராதனை நடந்தது.

இரவு, 7 மணிக்கு வெள்ளி மயில் வாகனத்தில் உற்சவர் முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் மாடவீதியில் திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

மலைப்பாதையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால் வாகனங்களில் வந்த பக்தர்கள் கடும் சிரமப்பட்டு, மலைக்கோயிலுக்கு சென்று மூலவரை தரிசனம் செய்தனர்.

இதில் திருத்தணி டி.எஸ்.பி., கந்தன் தலைமையில் ஆய்வாளர் மதியரசன் மற்றும் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

நீண்ட வரிசையில் காத்திருந்த பக்தர்கள்.
(உள்படம்) சிறப்பு அலங்காரத்தில் வள்ளி, தெய்வானையுடன் முருகப்பெருமான்.

அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட., (ஆர்சில்) CIN - U65999MH2002PLC134884 | இணையத்தளம்: https://auction.arcil.co.in
பல்வேறு ஆர்சில் டிரஸ்டுகளின் டிரஸ்ட்டி எனும் முறையில்.
ஆர்சில் அலுவலகம்: தி ரூபி, 10ஆவது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை – 400 028.
கிளை அலுவலகம்: 1G, 1ஆவது தளம், செஞ்சுரி வளாகம், எண் 560-562, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018.

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI சட்டம்) அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8 & 9 ஆகியவற்றின் E-ஏல இணைய வழிப் பொது விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை அதன் மேல் வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றுடன் திரும்பப் பெறும் பொருட்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("மேற்கூறிய சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8 & 9 ("மேற்கூறிய விதிகள்") ஆகியவற்றின்படி பல்வேறு ஆர்சில் டிரஸ்டுகளின் டிரஸ்ட்டி எனும் முறையில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட., ("ஆர்சில்") நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் (பதிவு செய்யப்பட்ட ஒப்படைப்பு ஒப்பந்தங்களின்படி நிதிச் சொத்துக்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில்) கீழே விவரிக்கப்பட்டுள்ளவையுமான அசையாச் சொத்துக்கள் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் முறையில் இணைய வழி ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.

வ. எண்	வ.எண் / கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்/கள் / ஜாமீன்தாரர்/கள் / அடமானதாரர்/கள் பெயர்	கடன் கணக்கு எண் / விற்கும் வங்கி	டிரஸ்ட் பெயர்	SARFAESI அறிவிப்பு நாள்படி நிலுவைத் தொகை	சுவாதீன வகை / நாள்	ஆய்வு நாள்	சொத்தின் வகை மற்றும் பரப்பு	டேவணித் தொகை (EMD)	குறைந்தபட்ச விலை	E-ஏல நாள் மற்றும் நேரம்
1.	ஹரிகணேஷ் (B1)	13867600004292 / 13867600004300 / ஃபெடரல் வங்கி லிமிடெட்	Arcil Retail Loan Portfolio 029-B Trust	ரூ. 4,96,31,568.08/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து முப்பத்தொராயிரத்து ஐந்நூற்றுஅறுபத்தெட்டு மற்றும் பைசா எட்டு மட்டும்) 05.03.2024 நாள்படி + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட	அடையாள சுவாதீனம் 05.03.2024	19.09.2024 மற்றும் 26.09.2024	பிரிபடாப்பங்கு : 2083 சதுர அடி / கட்டுமானம் : 3900 சதுர அடி.	ரூ. 32,00,000/- (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்)	ரூ. 3,20,00,000/- (ரூபாய் மூன்று கோடியே இருபது இலட்சம் மட்டும்)	30.09.2024 நண்பகல் 12:00 மணி

ஏலமிடப்படவுள்ள கடனீட்டுச் சொத்தின் விவரம்: **சொத்தின் உரிமையாளர்: ஹரிகணேஷ் (B1) அட்டவணை A:** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். பரப்பளவு: தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாவது தளத்துடன் தொடர்புடைய வில்லா எண் B1, மொத்தப் பரப்பளவு 3900 சதுர அடி (பொதுப்பங்குதி, பொதுப் பங்குகள் மற்றும் இன்டீரியர்ஸ் சேர்த்து) மற்றும் 2083 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய மனை எண்கள் 5, 6, 7 & 8, உட்பிரிவு செய்யப்பட்ட வகையில் மனை எண்கள் D, C, B & A முறையே மொத்தப் பரப்பளவான 24994 சதுர அடியில் அடங்கியது. அமைவிடம் - 12ஆவது குறுக்குத் தெரு, ரங்கா ரெட்டி கார்டன், நீலாங்கரை, சென்னை-600115, தற்போது நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், பழைய சர்வே எண்கள் 28/2A1, 28/3A, 28/2A2, 28/4C, 28/4B, புதிய சர்வே எண்கள் 28/10, 28/4A2, 28/4C, 28/2A1, 28/4B, 28/3A2, பட்டா எண்கள் 5530 & 5614- இன்படி, நீலாங்கரை கிராமம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 28/2 பாகம், தெற்கு: 12ஆவது குறுக்குத் தெரு விரிவு, கிழக்கு: சர்வே எண்கள் 28/2A2 & 28/4 (பழைய மனை எண் 4), மேற்கு: சர்வே எண்கள் 28/2A1 & 28/3A (பழைய மனை எண் 9). இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

2.	ஹரிகணேஷ் (B3)	13867600004284 / ஃபெடரல் வங்கி லிமிடெட்	Arcil Retail Loan Portfolio 029- B Trust	ரூ. 4,90,29,310.78/-(ரூபாய் நான்கு கோடியே தொண்ணூறு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து முந்நூற்று பத்து மற்றும் பைசா எழுபத்தெட்டு மட்டும்) 05.03.2024 நாள்படி + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட	அடையாள சுவாதீனம் 05.03.2024	19.09.2024 மற்றும் 26.09.2024	பிரிபடாப்பங்கு : 2083 சதுர அடி / கட்டுமானம் : 3900சதுர அடி.	ரூ.32,00,000/- (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்)	ரூ.3,20,00,000/- (ரூபாய் மூன்று கோடியே இருபது இலட்சம் மட்டும்)	30.09.2024 நண்பகல் 12:30 மணி

ஏலமிடப்படவுள்ள கடனீட்டுச் சொத்தின் விவரம்: **சொத்தின் உரிமையாளர்: ஹரிகணேஷ் (B3) : அட்டவணை – (B3):** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். பரப்பளவு: தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாவது தளத்துடன் தொடர்புடைய வில்லா எண் B3, மொத்தப் பரப்பளவு 3900 சதுர அடி (பொதுப்பங்குதி, பொதுப் பங்குகள் மற்றும் இன்டீரியர்ஸ் சேர்த்து) மற்றும் 2083 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய மனை எண்கள் 5, 6, 7 & 8, உட்பிரிவு செய்யப்பட்ட வகையில் மனை எண்கள் D, C, B & A முறையே மொத்தப் பரப்பளவான 24994 சதுர அடியில் அடங்கியது. அமைவிடம் - 12ஆவது குறுக்குத் தெரு, ரங்கா ரெட்டி கார்டன், நீலாங்கரை, சென்னை-600115, தற்போது நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், பழைய சர்வே எண்கள் 28/2A1, 28/3A, 28/2A2, 28/4C, 28/4B, புதிய சர்வே எண்கள் 28/10, 28/4A2, 28/4C, 28/2A1, 28/4B, 28/3A2, பட்டா எண்கள் 5530 & 5614- இன்படி, நீலாங்கரை கிராமம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 28/2 பாகம், தெற்கு: 12ஆவது குறுக்குத் தெரு விரிவு, கிழக்கு: சர்வே எண்கள் 28/2A2 & 28/4 (பழைய மனை எண் 4), மேற்கு: சர்வே எண்கள் 28/2A1 & 28/3A (பழைய மனை எண் 9). இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

3.	ரூபா ஹரிகணேஷ் (B2)	13867300003164 / ஃபெடரல் வங்கி லிமிடெட்	Arcil Retail Loan Portfolio 029- B Trust	ரூ. 4,48,84,001.24/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஒன்று மற்றும் பைசா இருபத்து நான்கு மட்டும்) 05.03.2024 நாள்படி + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட	அடையாள சுவாதீனம் 05.03.2024	19.09.2024 மற்றும் 26.09.2024	பிரிபடாப்பங்கு : 2083 சதுர அடி / கட்டுமானம் : 3900சதுர அடி.	ரூ.32,00,000/- (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்)	ரூ.3,20,00,000/- (ரூபாய் மூன்று கோடியே இருபது இலட்சம் மட்டும்)	30.09.2024 நண்பகல் 13:00 மணி

ஏலமிடப்படவுள்ள கடனீட்டுச் சொத்தின் விவரம்: **சொத்தின் உரிமையாளர்: ரூபா ஹரிகணேஷ் (B2): அட்டவணை (B2):** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம். பரப்பளவு: தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாவது தளத்துடன் தொடர்புடைய வில்லா எண் B2, மொத்தப் பரப்பளவு 3900 சதுர அடி (பொதுப்பங்குதி, பொதுப் பங்குகள் மற்றும் இன்டீரியர்ஸ் சேர்த்து) மற்றும் 2083 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய மனை எண்கள் 5, 6, 7 & 8, உட்பிரிவு செய்யப்பட்ட வகையில் மனை எண்கள் D, C, B & A முறையே மொத்தப் பரப்பளவான 24994 சதுர அடியில் அடங்கியது. அமைவிடம் - 12ஆவது குறுக்குத் தெரு, ரங்கா ரெட்டி கார்டன், நீலாங்கரை, சென்னை-600115, தற்போது நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், பழைய சர்வே எண்கள் 28/2A1, 28/3A, 28/2A2, 28/4C, 28/4B, புதிய சர்வே எண்கள் 28/10, 28/4A2, 28/4C, 28/2A1, 28/4B, 28/3A2, பட்டா எண்கள் 5530 & 5614 -இன்படி, நீலாங்கரை கிராமம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 28/2 பாகம், தெற்கு: 12ஆவது குறுக்குத் தெரு விரிவு, கிழக்கு: சர்வே எண்கள் 28/2A2 & 28/4 (பழைய மனை எண் 4), மேற்கு: சர்வே எண்கள் 28/2A1 & 28/3A (பழைய மனை எண் 9). இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

ஆர்சில் நிறுவனத்துக்குத் தெரிந்து நிலுவையில் உள்ள வழக்குகள்:	**ஏதுமில்லை**
ஏலப்புள்ளி தாக்கல் செய்யக் கடைசி நாள்:	27.09.2024 அன்று மாலை 5.00 மணி அல்லது அதற்குமுன்
கேட்பு வரைவோலை எடுக்கப்பட வேண்டிய பெயர்:	டிரஸ்ட் பெயர் பத்தியில் குறிப்பிட்டுள்ளபடி
RTGS விவரங்கள்	**கணக்கின் பெயர்:** Arcil Retail Loan Portfolio-029-B-Trust, **கணக்கு எண்:** 57500000961251, **கடன் கொடுத்த வங்கி:** HDFC வங்கி, **IFSC எண்:** HDFC0000542, **கிளை முகவரி:** கமலா மில்ஸ் வளாக கிளை, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013.
தொடர்பு நபர் பெயர் மற்றும் எண்	வைலேஷ் கெய்க்வாட் - 9867929121 (shailesh.gaikwad@arcil.co.in), மகேஷ் பங்கேரா - 9004173256 (mahesh.bangera@arcil.co.in, கார்த்திகேயன் ஜெயவேல் – 9841415252 (karthikeyan.jayavel@arcil.co.in

ஆர்சில் நிறுவனத்துக்குத் தெரிந்து நிலுவையில் உள்ள வழக்குகள்: ஏதுமில்லை | **ஆர்சில்-க்கு தெரிந்த வரையில் வில்லங்கம் / நிலுவைகள்** ஏதுமில்லை

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:
1) இந்த ஏல விற்பனை ஏல ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றின்படியும் அதில் வரையறுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளின்படியும் https://auction.arcil.co.in இணையத்தளத்தின் வாயிலாக e-ஏல முறையில் நடத்தப்படும்.
2) விற்பனையின்பொழுது ஏற்படக்கூடிய இணையச் செயலிழப்பு, இணைப்புச் சிக்கல்கள், கணினிப் பழுது, மின்தடை போன்றவற்றுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் ("A0") / ஆர்சில் பொறுப்பேற்க முடியாது.
3) ஏலத்தின் எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணமும் முன்வைக்காமலும் எந்த முன்னறிவிப்பும் இன்றியும் எந்த ஏலப்புள்ளியையும் / விலைகோரலையும் ஏற்க / புறக்கணிக்க / மாற்ற / ரத்துச் செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு.
4) உரிய சட்டத்தின்படி கடனீட்டுச் சொத்தினைத் தன் பெயருக்கு மாற்றிக் கொள்ள / பெற்றுக் கொள்ளச் செலுத்த வேண்டிய சட்ட